உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 05.08.2026 • மலர் 04 • இதழ்: 217 • புதன்

• Edition : Nagercoil • 05.08.2026 • Vol : 04 • Issue : 217 • Page : 4 • Rs. 5/-

# சென்னை மகளிர் டென்னிஸ் போட்டிக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு

## முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை: சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப்2026 போட்டிகளை சிறப்பாக நடத்துவதற்கு முதல்வர் விஜய் ரூ.10 கோடி நிதி ஒதுக்கியுள்ளார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு டென்னிஸ் சங்கம்சார்பில் சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப்2026 போட்டிகள் நவம்பர் மாதம் நடத்தப்பட உள்ளன. இந்தப் போட்டிகள் நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள டென்னிஸ் அரங்கில் நடைபெற உள்ளன.

தற்போது இதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், நடப்பாண்டு நடைபெறவுள்ள போட்டிகளில் உலகின் முன்னணி மகளிர் டென்னிஸ் வீராங்கனைகள் கலந்து கொள்ளஇருக்கின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தின் தலைவர் விஜய் அமிர்தராஜ் தலைமையிலான குழுவினர், முதல்வர் விஜய்யை சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினர்.

அதன்பின் டென்னிஸ் போட்டிகளை சிறப்பாக நடத்துவதற்காக தமிழக அரசின் சார்பில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வின்போது, விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், விளையாட்டுத் துறை செயலர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.




## நாகர்கோவிலில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது கண்டித்து திமுக போராட்டம்



நாகர்கோவில், ஆக. 5

தஞ்சாவூரில் நடைபெற்ற திமுக ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், தமிழக முதல்வர்ஜோசப் விஜய் குறித்து பேசிய கருத்துக்கள் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. பெண்களை இழிவு படுத்தும் வகையில் பேசிய உதயநிதி ஸ்டாலின் மீது நடவடிக்கை எடுக்க கோரி பல்வேறு பெண்கள் அமைப்பினர் போர்க்கொடி தூக்கி உள்ளனர்.

இந்த நிலையில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சென்னையில் நேற்று கைது செய்யப்பட்டார். அவரது மீது 9பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தை கண்டித்து கன்னியாகுமரி மாவட்ட திமுகவினர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் போராட்டம் நடத்தினர்.

நாகர்கோவிலில் திமுக மாவட்ட மாவட்ட அலுவலகத்தில் தொண்டர்கள் திரண்டனர். பின்னர் காவல்துறைக்கு கண்டனம் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதை அடுத்து வடசேரி சந்திப்பில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தை கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் மகேஷ் துவக்கி வைத்து பேசினார்.அவர் பேசுகையில், விவசாயிகளின் உரிமைக்காகவும் காவிரி நீருக்காகவும் தஞ்சையில் அறவழியில் போராடிய எதிர்கட்சித் தலைவரின் குரலை நசுக்க நினைக்கும் அரசின் அடக்குமுறைக்கு திமுக ஒருபோதும் அஞ்சாது. மேலும் இந்த கைது நடவடிக்கை முற்றிலும் அரசியல் பழிவாங்கும் செயல். காவல்துறையின் ஒருதலைபட்சமான போக்கை கடுமையாக கண்டிப்பதாகவும் கூறினார். பின்னர் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தொண்டர்கள் உதயநிதி ஸ்டாலின் கைதை உடனடியாக வாபஸ் பெற வலியுறுத்தி கண்டன கோஷங்கள் எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் திமுக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொது குழு உறுப்பினர்கள், நகர ஒன்றிய பகுதி செயலாளர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

உதயநிதி ஸ்டாலின் கைதை தொடர்ந்து நாகர்கோவில் பகுதியில் அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறாமல் தடுக்க திமுக அலுவலகம் மற்றும் நகரின் முக்கிய சந்திப்பு பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இந்த அவசரப் போராட்டத்தால் நாகர்கோவில் பகுதியில் பரபரப்பு நிலவியது.

## தென் தாமரைகுளம் அருகே மதுவில் விஷம் கலந்து குடித்து ஆட்டோ டிரைவர் தற்கொலை

கன்னியாகுமரி, ஆக.5

கன்னியாகுமரி அருகே வடக்கு தாமரைக்குளம் பகுதியை சேர்ந்தவர் ஹரி (55). ஆட்டோ டிரைவர். இவருக்கு திருமணம் ஆகவில்லை. இதனால் மன வருத்தத்தில் இருந்து வந்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவ தினம் ஹரி, தாமரைக்குளம் ஆட்டோ ஸ்டாண்டில் வைத்து மதுவில் விஷத்தை கலந்து குடித்துள்ளார்.

பின்னர் விஷம் குடித்ததை அவரது சகோதரர் சுரேஷ் என்பவரிடம் போன் செய்து தெரிவித்துள்ளார். உடனே சுரேஷ் அவரை தனியார் ஆம்புலன்ஸ் வரவழைத்து ஹரியை குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அழைத்துச் சென்றார். அங்கு பரிசோதித்த டாக்டர்கள் ஹரி ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்த புகாரின் பேரில் தென் தாமரைகுளம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.




## குமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் கதிரியக்க சிகிச்சை மையம்

நாகர்கோவில், ஆக.5

கன்னியாகுமரி மாவட்ட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்டுள்ள புற்றுநோய் கதிரிக்க சிகிச்சை மையத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிகாட்சி வாயிலாக திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் பிரதாப் தலைமை வகித்தார். சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் குத்து விளக்கேற்றினார். தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டம் உள்ளிட்ட தென்மாவட்ட மக்களின் சார்பாக தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவித்து அமைச்சர் பேசியதாவது: கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.6.78 கோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள டெலிகோபால்ட் புற்றுநோய் கதிரியக்கசிகிச்சைமையத்தை தமிழக முதல்வர் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்துள்ளார். இந்த புதிய கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவு செயல்பாட்டிற்கு வந்துள்ளதன் மூலம் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தை சேர்ந்த புற்றுநோய் மருத்துவ பயனாளிகள் தங்கள் மாவட்டத்திலேயே தரமான கதிரிவீச்சு சிகிச்சையைப் பெறும் வசதி ஏற்பட்டுள்ளது. அண்டை மாநிலமான கேரளாவுக்கு சென்று சிகிச்சை பெறுவதை தவிர்த்து, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையிலேயே கதிர்வீச்சு சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்.

## கன்னியாகுமரி அருகே 2 கோயில்களில் உண்டியல் திருட்டு

கன்னியாகுமரி, ஆக.5

கன்னியாகுமரியை அடுத்த கோவளம் சமாதானபுரம் பகுதியை சேர்ந்தவர் மதன் (50). இவர் அப்பகுதியில் உள்ள தேவி முத்தாரம்மன் கோவிலில் பொருளாளராக இருந்து வருகிறார். நேற்று முன்தனம் இரவு கோயிலை பூட்டி விட்டு சென்றுள்ளார். நேற்று காலை 7 மணி அளவில் கோயிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய சென்றுள்ளார். அப்போது கோயிலில் உண்டியல் உடைக்கப்பட்ட நிலையில் காணிக்கை பணம் திருடப்பட்டு இருந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்தவர் கோயில் நிர்வாகிகளிடம் தெரிவித்துள்ளார். அவர்கள் வந்து பார்த்தபோது அங்கிருந்த சூலாயுதத்துடன், அருகில் உள்ள சிவ சுடலை சுவாமி கோயிலையும் உடைத்து மர்ம நபர்கள் பணத்தை திருடி சென்றது தெரிய வந்தது.

இது குறித்து மதன் தென் தாமரை குளம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரில் கோவில் இருந்து திருட்டுப் போன பணம் ரூ. 5 ஆயிரம் இருக்கும் என தெரிவித்துள்ளனர். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து அந்த பகுதியில் உள்ள சிசிடி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நாகர்கோவில் கோணத்தில் தொழில் திறன் மைய பணிமனை திறப்பு

### அமைச்சர் குத்து விளக்கேற்றினார்



நாகர்கோவில், ஆக.5

கன்னியாகுமரி மாவட்ட உயர்கல்வித்துறையின் சார்பில் கோணம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிதாக 6 வகுப்பறைகள், மற்றும் தொழில் திறன்மைய 4.0 பணிமனை போன்றவை கட்டி முடிக்கப்பட்டது. இவற்றைதமிழகமுதல்வர் ஜோசப் விஜய் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார் அதனைத்தொடர்ந்து கோணம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், தலைமை வகித்தார். அமைச்சர் ராஜேஷ் குமார் குத்துவிளக்கேற்றி, நன்றி தெரிவித்து பேசுகையில்:

கோணம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், நவீன வசதிகளுடன்பெருந்தலைவர் காமராஜர் திட்டத்தின் கீழ் ரூ.2.70 கோடி மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்டு ள்ள கூடுதல் 6 வகுப்பறைகளை தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைத்துள்ளார்கள்.

கோணம் அரசு தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் மாணவர்களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தும் வகையில் ரூ.6.25 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள தொழில் திறன்மிகு மையம் 4.0 பணிமனை கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலம் கல்லூரி மாணவர்கள் நேரடியாகத் தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப நவீன கருவிகளைக் கொண்டு பயிற்சி பெற முடியும். இத்தகைய மேம்பட்ட பயிற்சிகள் மூலம் மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறன் அதிகரித்து, முன்னணி பன்னாட்டு நிறுவனங்களில் உயர் ஊதியத்தில் பணிபுரியும் வாய்ப்புகள் பெருகும். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆர். ஐஸ்வர்யா, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்முனைவர்சுசீலா, அரசு தொழில்நுட்ப கல்லூரிமுதல்வர்ஆல்பர்ட் சேவியர், துணை முதல்வர் ஜெரால்டு அகிலா, பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள், துறை அலுவலர்கள்உட்படபலர் கலந்துகொண்டார்கள்.




தருமபுரி மாவட்டம் சோகத்தூரில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் ஒருங்கிணைந்த அரசு பட்டுக்கூடு அங்காடி வளாகத்தை சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மதன் ராஜா, பட்டு வளர்ச்சி துறை இயக்குனர் சதீஷ், மாவட்ட ஆட்சியர் சரவணன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு கட்டுமான பணிகளின் முன்னேற்றம் விவசாயிகளுக்கான மின்னணு பட்டுக்கூடு பரிவர்த்தனை (eAuction) வசதிகள் மற்றும் அங்காடியின் செயல்பாடுகள் குறித்து அலுவலர்களிடம் விரிவாக கேட்டறிந்தனர். இந்த ஆய்வின்போது சேலம் துணை இயக்குனர் பொன்மாரி, தருமபுரி மண்டல இணை இயக்குனர் இளையராஜா, துணை இயக்குனர்கள், உதவி இயக்குனர், தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் ஜார்ஜ் மற்றும் துறையின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னிமலை பகுதிகளில் வளர்ச்சிப பணிகள் ஈரோடு ஆட்சியர் ஆய்வு

ஈரோடு ஆக 5

ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முகாசிபிடாரியூர், பனியம்பள்ளி அட்டவணை பிடாரியூர். அம்மாபாளையம் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்மு

காபிடாரியூர், அரசு உயர்நிலைப்பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.89.22 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து, ஆயிரத்து பத்து குடியிருப்பு பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய உயர்நிலைப்பள்ளியில் செயல்பட்டு வரும் சமையல் மற்றும் இருப்பு அறையினையும் பார்வையிட்டு மாணவர்களுக்கு சுகாதாரமான மற்றும் தரமான உணவு தயாரிக்கப்படுவதையும். சமையலறையின் தூய்மை குடிநீர் வசதி, உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் பராமரிப்பு உள்ளிட்டவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, முகாசிபிடாரியூர் பருதியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வரும் நுண்ணுயிர் ரக்கூடம் மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை மையம் ஆகியவற்றின் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மண்புழு உரம் தயாரிக்கும் மையத்தில் மண்புழு உற்பத்தி, மூலப்பொருட்களின் பயன்பாடு, உற்பத்தி அளவு மற்றும் உரத்தின் தரம் குறிந்தும் பார்வையிட்டார். தொடர்ந்து பணியம்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட தோப்புப்பாளையத்தில் அமைந்துள்ள உதயம் சிறப்புப் பள்ளியை பார்வையிட்டு, பள்ளியின் சமையலறை குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்



## வானிலை முன்னறிவிப்பு: சென்னை, தி.மலை உள்ளிட்ட 9 மாவட்டங்களில் மிதமான மழை வாய்ப்பு

சென்னை: தமிழகத்தில் திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளூர், திருச்சி, கரூர் ஆகிய 9 மாவட்டங்களில் நாளை (ஆக.5) மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய உயரதிகாரியும், விஞ்ஞானியுமான வி.ஆர்.துரை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தெற்கு உள் கர்நாடகா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 5.8 கி.மீ. உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதுதவிர, இலங்கையின் தென்மேற்கு பகுதிகள்மற்றும்அதையொட்டிய பகுதிகள், மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய ஆந்திர கடலோர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. மேலும், வட தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது. இவற்றின் காரணமாக, (ஆக.4) கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் இடியுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும்.

ஆக.6, 7 ஆகிய தேதிகளில், தேனி மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்யக்கூடும். இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும்.



# ஈரோட்டில் முன்னாள் அமைச்சர் முத்துசாமி தலைமையில் திமுகவினர் தீவிர ஆர்ப்பாட்டம்!

ஈரோடு ஆகஸ்ட் 5 ஆபாசமாக பேசியதாகக் கூறி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் திமுகவினர் வீரியமான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, ஈரோடு காளை மாட்டு சிலை அருகே ஈரோடு மாவட்ட திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் முத்துசாமி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் திரளான திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தின் போது உரையாற்றிய முன்னாள் அமைச்சர் முத்துசாமி, காவிரி நீர் திசை திருப்பும் விவகாரம், மாநிலத்தில் சீர்கெட்டுள்ள சட்டம் ஒழுங்கு பிரச்சனை மற்றும் மின்சார கட்டண உயர்வு ஆகியவற்றில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காகவே எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மீது பொய் வழக்கு பதிவு செய்து கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர் என கடுமையாகக் குற்றம்சாட்டினார்.

மேலும், எதிர்க்கட்சித் தலைவர் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்குகளை உடனடி திரும்பப் பெற வலியுறுத்தியும், இந்த கைது நடவடிக்கையைக் கண்டித்தும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு பொறியியல் கல்லூரிகள் ஆகியவற்றில் 274 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களைத் திறந்து வைத்தார்.அதனைத் தொடர்ந்து மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., மதுரை மாவட்டம்,திருப்பரங்குன்றம் ரோடு தமிழ்நாடு அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரியில் பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.454.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நான்கு வகுப்பறை, இரண்டு ஆய்வகம் மற்றும் திறன்மிகு ஆய்வகக் கட்டடங்களை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பார்வையிட்டார். மாநகராட்சி மேயர் (பொ) / துணை மேயர் தி.நாகராஜன் உடன் உள்ளார்.



ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முகாசிப்பிடாரியூர் ஊராட்சி 1010 குடியிருப்பு பகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சிறிய அளவிலான இயற்கை உரம் தயாரிக்கும் மையத்தினை மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி நேற்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்

# தென்காசியில் கோவில் திருவிழாக்களில் இரவு முழுவதும் கலைநிகழ்ச்சிகளுக்கு அனுமதி கோரி மனு



தென்காசி, ஆக. 5: தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில், தென்காசி மாவட்ட ஆட்சியரிடம் கோவில் திருவிழாக்கள் மற்றும் கொடை விழாக்களில் இரவு முழுவதும் கலைநிகழ்ச்சிகள் நடத்த அனுமதி வழங்கக் கோரி மனு அளிக்கப்பட்டது.

அந்த மனுவில், தமிழகத்தின் பிற மாவட்டங்களில் கோவில் திருவிழாக்களின் போது இரவு நேர நிகழ்ச்சிகள் நடைபெற அனுமதி வழங்கப்பட்டாலும், தென்காசி மாவட்டத்தில் மட்டும் இரவு 10 மணிக்குப் பிறகு கலைநிகழ்ச்சிகள் நடத்த காவல்துறை அனுமதி மறுப்பதாகவும், சில இடங்களில் உயர் நீதிமன்ற அனுமதி பெற்ற பின்னரும் நிகழ்ச்சிகளை நடத்த முடியாத நிலை இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் மாவட்டங்களில் குலதெய்வமற்றும்காவல் தெய்வ வழிபாடுகளின் ஒரு பகுதியாக 'சாமக் கொடை' உள்ளிட்ட பாரம்பரிய நிகழ்வுகள் இரவு முழுவதும் நடைபெறுவது பல ஆண்டுகளாக நிலவி வரும் மரபு என்றும், பாட்டுக்கச்சேரி மற்றும் கலைநிகழ்ச்சிகள் பொதுவாக இரவு 10 மணிக்குப் பிறகு தொடங்கி நள்ளிரவு வரை நடைபெறுவது வழக்கமாக இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக கடுமையான விதிமுறைகள், காவல்துறை அனுமதி கட்டுப்பாடுகள், பாதுகாப்பு கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற அனுமதி போன்ற நடைமுறைகளால் பாரம்பரிய திருவிழாக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக கிராமிய கலைஞர்கள் தொழில் இழந்து வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களுக்கு இடம்பெயரும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், இந்நிலை தென் மாவட்ட மக்களின் பாரம்பரிய கலை, பண்பாடு மற்றும் குலதெய்வ வழிபாட்டு மரபுகளை படிப்படியாக பாதித்து வருவதாகவும், தென்காசி மாவட்ட மக்களுக்கு மட்டும் தனித்துவமான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது வேதனை அளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தென்காசி மாவட்டத்தில் நடைபெறும் கோவில் திருவிழாக்கள் மற்றும் கொடை விழாக்களில் இரவு 10 மணிக்குப் பிறகும், இரவு முழுவதும் கலைநிகழ்ச்சிகள், பாட்டுக்கச்சேரிகள் மற்றும் சாமக் கொடை வழிபாடுகளை நடத்த அனுமதி வழங்க மாவட்ட நிர்வாகம் அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# அத்தியூர் கிராமத்தல் எழுத்தருளியிருக்கும் ஸ்ரீவேம்பு மாரியம்மன் சக்தி பீடத்தில் கூழ்வார்க்கும் திருவிழா



வேலூர் ஆக:05 வேலூர் மாவட்டம் அணைகட்டு தாலுக்கா அத்தியூர் கிராமத்தல் எழுத்தருளியிருக்கும் ஸ்ரீவேம்பு மாரியம்மன் சக்தி பீடத்தில் 3ஆம் வெள்ளிகிழமையை முன்னிட்டுகூழ்வார்க்கும் திருவிழா அத்தியூர் ஸ்ரீ வேம்பு மாரியம்மன்ஆலய நிர்வாகி தவத்திரு வேம்பு.வெங்கடேசன் முன்னிலையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.இதில் அம்மனுக்கு பால் அபிஷேகம் கரக ஊர்வலம், கூழ்வார்த்தல் மற்றும் அன்னதானம் கொக்கலிகட்டை போன்ற நிகழ்ச்சிகள் வெகு விமரிசையாக நடைப்பெற்றது அதனை தொடர்ந்துவேம்பு மாரியம்மன் திருவீதி உலா நடைப்பெற்றது.இந்த நிகழ்ச்சியினை ஊர் பொதுக்கள் மற்றும் இளைஞர்கள் என நிகழ்ச்சி ஏற்ப்பாட்டினை செய்தியிருந்தனர். இதில் பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசித்து சென்றனர்.

# தருமபுரியில் உதயநிதி ஸ்டாலின் கைது செய்ததை கண்டித்து திமுகவினர் சாலை மறியல்



தருமபுரி ஆகஸ்ட் 05 தருமபுரி மாவட்ட திமுக சார்பில் தமிழக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டதை கண்டித்து தருமபுரி நான்கு ரோட்டில் திமுகவினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக அரசு மற்றும் தமிழக காவல்துறையை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பி திமுகவினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் தர்மசெல்வன், நகர செயலாளர்கள் நாட்டான் மாது, கௌதம், நகரத் துணைச் செயலாளர் முல்லைவேந்தன், தலைமை கழக பேச்சாளர் டி. ஏ. ரவி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அசோக் குமார், கலை இலக்கிய பகுத்தறிவு அணி தலைவர் டி. ஏ. குமார், ஒன்றிய செயலாளர்கள் டி. எல். காவேரி, ஏ.சி. சண்முகம், முன்னாள் ஒன்றிய செயலாளர் எச்சனயள்ளி சண்முகம்,ஏ. மாதேஸ்வரன், உஷா ராஜேந்திரன் மற்றும் திமுக நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை காவல்துறையினர் கைது செய்து திருமண மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர்.

# கிருஷ்ணகிரியில் எம்எல்ஏ முகுந்தன்பாண்டியன் தலைமையில் தவெகவினர் கண்டன ஆர்ப்பாட்டம்




கிருஷ்ணகிரிஆகஸ்ட்5: கிருஷ்ணகிரி தவெக எம்.எல்.ஏ முகுந்தன் தலைமையில் உதயநிதி ஸ்டாலினின் ஆபாச பேச்சை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் கிருஷ்ணகிரி அண்ணா சிலை எதிரே நடைபெற்றது. இதில் பெண்கள் உட்பட 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழக வெற்றிக்கழக மகளிர் அணியினர் அவருக்கு எதிராக கோஷங்களை எழுப்பி, கண்டன குரல்களை பதிவு செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது நகரச் செயலாளர் சசி, வேலன், மனோஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# பரமக்குடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மின்னணு நூலகக் கட்டிடம் திறப்பு விழா

பரமக்குடி, ஆக. 5 பரமக்குடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிதாக கட்டப்பட்ட மின்னணு நூலகக் கட்டிடத்தின் திறப்பு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. விழாவில் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிவகுரு பிரபாகரன் குத்துவிளக்கு ஏற்றி வைத்து புதிய மின்னணு நூலகக் கட்டிடத்தை திறந்து வைத்தார். ரூ.1.85 லட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட இந்த நூலகக் கட்டிடம் மாணவர்கள் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கல்வி பயில உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டு திறப்பு விழா புதிய மின்னணு நூலகக் கட்டிடத்தை அனைவரும் பார்வையிட்டனர்.

# நகர்ப்புற அரசுப் பள்ளிகளுக்கு துப்புரவுப் பணி மானியம் வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு



நாகர்கோவில்,ஆக.5 குமரி மாவட்டம் முழுவதும் உள்ள நகர்ப்புற அரசுப்பள்ளிகளில்சுகாதாரம் பேணவும், தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் மாதஊதியமான₹1,500ஐ உடனடியாக விடுவிக்க வலியுறுத்தி நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது. கப்பியோரை பேரூராட்சி மன்ற உறுப்பினரும், கஞ்சிகுழி அரசு நடுநிலைப் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவருமான எல். ஆன்சி சோபா ராணி இக்கோரிக்கை மனுவை அளித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள முக்கிய விவரங்கள்: கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற அரசுப் பள்ளிகளில் கழிப்பறைகள் பராமரிப்பு, வகுப்பறைகள் மற்றும் பள்ளி வளாகத் தூய்மைப் பணிகளுக்காக தூய்மைப் பணியாளர்களுக்கு மாதம் ₹1,500 வீதம் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வழங்கப்பட்டு வந்தது. கடந்த 2024ஆம் ஆண்டின் இறுதியில், நகர்ப்புறப் பகுதிகளில் செயல்படும் அரசுப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சிகளான நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, ஜனவரி 2025 முதல் ஜனவரி 2026 வரையிலான ஒரு வருட காலத்தில் பள்ளித் தூய்மைப் பணியாளர்களுக்கான ஊதியமும், தூய்மைப் பொருட்கள் வாங்குவதற்கான நிதியும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2026ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டுமே ஊதியம் வழங்கப்பட்ட நிலையில், இனி மேல் நிதி வழங்க முடியாது என நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகங்கள் தெரிவித்துள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, நிலுவையில் உள்ள பழைய தொகையுடன் சேர்த்து தற்போதைய ஊதியத்தையும் விரைந்து வழங்கி, அரசுப் பள்ளிகளின் சுகாதாரத்தையும் தூய்மைப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பள்ளி மேலாண்மைக் குழு சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# திருநங்கைகள் காலனி நாகாத்தாள் கோவில் பொங்கல் விழாவை முன்னிட்டு அம்மன் ஊர்வலம்

திருப்பூர், ஆக. 5: திருப்பூர் நெருப்பெரிச்சல், ஜேஜே நகர், திருநங்கைகள் காலனி ஸ்ரீ நாகாத்தாள் அருள்மிகு ஸ்ரீ சமயபுரத்தாள் கோவிலில் 16ம் ஆண்டு பொங்கல் விழா கடந்த 1 ஆம் தேதி தொடங்கியது. நேற்று முன்தினம் பால் குடம், தீர்த்த குடம் எடுத்தல் ஆகியவை நடந்தது.

இந்த நிலையில் நேற்று காலை பொங்கல் மாவிளக்கு முளைப்பாரி, மாலை அம்மன் ஊர்வலம், அலகு குத்தி பூ சட்டி எடுத்தல் ஆகியவை நடைபெற்றது. பக்தர்கள் பலர் 17அடி நீளம் வரையிலான அலகு குத்தினர். இதில் ஏராளமான திருநங்கைகள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் சாமி வேடம் அணிந்து மேளதாளம் முழங்க நடனம் ஆடியும் வந்தனர். ஊர்வலம் கோவிலில் இருந்து திருநங்கைகள் அடுக்குமாடி குடியிருப்பு வரை சென்றது.இதற்கான ஏற்பாடுகளை திருநங்கைகள் சங்க தலைவிகள் அய்யம்மாள், திவ்யா மற்றும் பலர் செய்தனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய், அவர்கள் உயர்கல்வித் துறையின் சார்பில் காட்பாடி வட்டம், சேர்க்காடு ஊராட்சியில் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் ரூ.600 இலட்சம் மதிப்பில் கட்டடப்பட்டுள்ள 18 வகுப்பறைகள் கொண்ட கட்டடத்தை காணொளிக் காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.எஸ்.லீலா அலெக்ஸ், இ.ஆ.ப. அவர்கள் குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது காட்பாடி சட்டமன்ற உறுப்பினர் மரு.ம.சுதாகர் திருவள்ளுவர் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர்.ஜே. செந்தில்குமார் வேல்முருகன், வளாக இயக்குநர் முனைவர் அராஜசேகர், செயல் கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் ஆர்.பாபு ஜனார்த்தனன், சேர்க்காடு ஊராட்சி மன்ற தலைவர் .பத்மநாபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வேலூர் ஆற்காடு சர்வீஸ் சாலையில் புதியதாக யூனி ஸ்கேன் மற்றும் லேப்ஸ் 12 வது கிளை திறப்பு விழா



வேலூர் ஆக:05 வேலூர் மாவட்டம் வேலூர் சத்துவாச்சாரி மாவட்டஆட்சியர் அலுவலகம் எதிரில் மற்றும் வேலூர் ஆற்காடு சர்வீஸ் சாலையில் புதியதாக யூனி ஸ்கேன் மற்றும் லேப்ஸ் 12 வது கிளை திறப்பு விழா வேலூர் அண்ணா சாலை முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி பின்புறம் உள்ள வீனஸ் டார்லிங் மஹாலில்மிகவிமர்சியாக திறப்பு விழா நடைபெற்றது இவ் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக நறுவி மருத்துவமனையின் தலைவர் G.V.சம்பத். வேலூர் அரியூர் ஸ்ரீ புரம் நாராயணி மருத்துவமனைஇயக்குனர்பாலாஜி நந்தகோபால்.வேலூர் அடுக்கும் பாறை அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி கண்காணிப்பாளர் ரதி திலகம். ஆகியோர் கலந்துகொண்டுகுத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர் தலைவர் OF IMA. Vellore branch சதீஷ்குமார் MD.மற்றும் மருத்துவர் பிரபுராதன்.மருத்துவர் இளஞ்செழியன். மருத்துவர் வினோத் கண்ணன்.உள்ளிட்ட அரசு மருத்துவர்கள் தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் இயக்குனர்கள் யூனி ஸ்கேன் லேப்ஸ் மருத்துவர்கள்பணியாளர்கள்வாடிக்கையாளர்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டு திறப்பு விழாவை சிறப்பித்தனர் மேலும் இந்நிகழ்ச்சியில் அனைவருக்கும் அறுசுவை அசைவ விருந்துமற்றும் டின்னர் வழங்கப்ப



# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி கைதை கண்டித்து ஊத்தங்கரையில் திமுகவினர் மறியல்

கிருஷ்ணகிரி

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி கைது செய்யப் பட்டதைக் கண்டித்து, கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் திமுகவினர் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப் பாட்டத்தின் போது, தமிழக முதல்வரும், தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) தலைவருமான விஜய்யைக் கண்டித்து திமுக தொண்டர்கள் தொடர்ந்து ஆவேசமாக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

அப்போது ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்ட திமுகவினருக்கும், பாது காப்புப் பணியில் இருந்த காவல் துறையினருக்கும் இடையே திடீரென கடும் தள்ளுமுள்ளு உருவானது. இதனைத் தொடர்ந்து, திருப்பத்தூர் ஊத்தங்கரை பிரதான சாலையில் அமர்ந்து திமுகவினர் திடீர் மறியலில் ஈடுபட்டதால் அப்பகுதியில் போக்குவ ரத்து பாதிக்கப்பட்டது.

இதையடுத்து, மறியலில் ஈடுபட்ட திமுகவினரை ஊத்தங்கரை காவல்துறை யினர் அதிரடியாகக் கைது செய்து காவல் வாகனங்க ளில் ஏற்றிச் சென்றனர்.

அவ்வாறு கைது செய்யப் பட்ட திமுகவினரைகாவல் துறையினர் வாகனங்களில் அழைத்துச் சென்றபோது, ஊத்தங்கரை ரவுண்டானா பகுதியில் தவெக கட்சியி னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டுக் கொண்டிருந்தனர்.

அந்த வழியாக வாகனத் தில் சென்ற கைது செய்யப் பட்ட திமுகவினர், அங்கு கூடியிருந்த தவெகவினரை பார்த்தவாறு மீண்டும் ஆவேசமாக கோஷங்களை எழுப்பிச் சென்றனர்.

இரு கட்சியினரும் எதிர் எதிரே இருந்த சூழலில் கோஷங்கள் எழுப்பப்பட் டதால், அப்பகுதியில் சிறிது நேரம் பெரும் பரப ரப்பும் பதற்றமான சூழ லும் நிலவியது.

# உதயநிதி சர்ச்சை பேச்சு: த.வெ.க., – தி.மு.க., போராட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தி.மு.க.,வினர், 750 பேர் கைது



கிருஷ்ணகிரி, ஆக. 5 தஞ்சையில்நடந்ததி.மு.க., ஆர்ப்பாட்டத்தில், தமிழக முதல்வர் குறித்து சர்ச்சைக் குரிய பேசியதாக எதிர் கட்சி தலைவர் உதயநி தியை கண்டித்து, த.வெ.க.,வினரும், உதய நிதி கைதை கண்டித்து தி.மு.க.,வினரும் கிருஷ் ணகிரியில் போட்டி போட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில், மாவட்டமுழுவதும் மறி யல், ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்ட, 750 தி.மு.க.,வினர் கைது செய்யப்பட்டனர். மேகதாது அணை விவகா ரம் மற்றும் காவிரி நீர் பிரச் னையை முன்னிறுத்தி தஞ் சையில் தி.மு.க., சார்பில் நேற்று முன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. கட்சியின் இளைஞரணி செயலாளரும் சட்ட சபை எதிர்க்கட்சிதலைவருமான உதயநிதிதலைமை வகித்து பேசுகையில், முதல்வர் விஜய் குறித்து சர்ச்சைக்கு ரிய வகையில் பேசியதாக எதிர்ப்பு கிளம்பியது. இந்நி லையில் அவரை நேற்று சென்னையில் போலீசார் கைது செய்தனர். உதயநி தியை கைதை கண்டித்து மாநிலம் முழுவதும் தி.மு.க.,வினரும், முதல் வர் விஜயை அவதூறாக பேசியதை கண்டித்து த.வெ.க.,வினரும் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர். கிருஷ்ணகிரி ஐந்துரோடு ரவுண்டானாவில் முன் னாள் மாவட்ட செயலாள ரும், தி.மு.க., மாநில அமைப்புசாரா ஓட்டுரணி செயலாளர் செங்குட்டு வன் தலைமையில் நகர பொறுப்பாளர்கள் அஸ் லம், வேலுமணி, ஒன்றிய செயலாளர்கள் தனசேக ரன், மகேந்திரன், கோவிந் தன், பாலாஜி, பரந்தாமன், உள்பட, 53 பேர் காவேரிப் பட்டணம் ஒன்றிய செயலா ளர்கள் மகேந்திரன், தேங் காய் சுப்பிரமணி உள்பட, 60 பேர் பர்கூர், ஊத்தங் கரை, சூளகிரி, ஓசூர், தேன் கனிக்கோட்டை, வேப்பன ஹள்ளி உள்ளிட்ட, 22 இடங்களில் ஆர்ப்பாட்டம் மற்றும் மறியலில் ஈடு பட்ட, 750 பேர் கைது செய் யப்பட்டு மாலை விடுவிக் கப்பட்டனர்.




# ஈரோட்டில் மினிஸ்டர் ஒயிட் புதிய ஷோரூம்

ஈரோடு ஆக 5

தென்னிந்தியாவின் முன்னணி பாரம்பரிய ஆண்கள் ஆடை பிரமாண்டான மினிஸ்டர் ஒயிட் புதிய ஷோரூம் ஈரோடு நேதாஜி ரோட்டில் திறக்கப்பட்டு உள்ளது. இந் தியாவின் 68வது மற்றும் ஈரோட்டின் 2வது இந்த புதிய ஷோரூமை ஒட்டோ குளோதிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் Otto Essentials பிரிவின் CBO பிரவீன் மாரி முத்து திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பேட்சியா ஈரோடு தலைவர் வி.கே. ராஜமாணிக்கம் மற்றும் முனி ருல் இஸ்லாம் மசூதி அறக்கட்டளை செயலாளர் சி.ஏ. ஷௌகத் அலி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். புதிய ஷோரூமில் பிரீமியம் வேஷ்டிகள், Flexi Waist கிடைக்கின்றன. இந்த புதிய வேஷ்டிகள், திருமண சில்க் திறப்பின் மூலம், தென் னிந்திய கலெக்ஷன்கள், லினன் வாடிக்கையாளர்க ளுக்கு சட்டைகள், தரமான காட்டன் குர்தாக்கள், ஷர்ட் டிங் சூட்டிங் துணிகள், மற்றும் இன்னர்வேர் உள்ளிட்ட பல்வேறு தரமான ஆண்கள் ஆடைகள் ஒரே இடத்தில் பாரம்பரிய ஆடைகளை மேலும் எளிதாக கொண்டு சேர்க்கும் தனது வளர்ச்சி பயணத்தை மினிஸ்டர் வைட் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.

# சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் உட்பட நூற்றுக்கணக்கான திமுகவினர் கைது

தூத்துக்குடி

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைதைக் கண்டித்து, தூத் துக்குடி பழைய பேருந்து நிலையம் அருகே சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் உட் பட நூற்றுக்கணக்கான திமுகவினர் கைது செய் யப்பட்டனர். எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்கைது செய்யப்பட்ட செய்தி பர வியதையடுத்து, அதைக் கண்டித்து தூத்துக்குடி பழைய பேருந்து நிலை யம்பகுதியில்திமுகவினர் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட் டனர்.



சாலைமறியல்போராட் டத்திற்குத்தலைமைதாங் கிப் பேசிய முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்ததாவது: "சட்ட மன்றத்தில் தி.மு.க. வின ரின் கேள்விகளுக்கும் விவாதங்களுக்கும் பதில் அளிக்க முடியாமல் திண றும் த.வெ.க. அரசு, பழி வாங்கும் நோக்கில் எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினைக் கைது செய் துள்ளது. இந்த நடவ டிக்கை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. த.வெ.க.அரசு தொடர்ந்து ஜனநாயக வழியிலான போராட்டங்களை முடக்கி, மக்களின் குரல் வளையை நெரித்து வருகி றது. இத்தகைய அடக்கு முறைகளுக்கு தி.மு.க. ஒருபோதும் அஞ்சாது." என்றார். முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் தலைமையில் திரண்ட நூற்றுக்கணக்கான திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், கைது நட வடிக்கைக்கு எதிராகவும், காவல்துறையைக் கண் டித்தும் தீவிர முழக்கங்களை எழுப்பி னர். இந்தத்திடீர்போராட் டத்தால் அப்பகுதியில் கடுமையான போக்குவ ரத்து நெரிசல் ஏற்பட்டது.

# ஈரோடு புத்தகத் திருவிழாவில் தொல்காப்பியத்தை பிழையின்றி எழுதிய மாணவிக்கு பரிசு




ஈரோடு ஆக 5 பள்ளிக் கல்வித்துறை மக் கள் சிந்தனைப் பேரவை சார்பில் ஈரோடு புத்தகத் திருவிழா நடந்து வருகி றது. இதில் சிறப்பு விருந் தினராகப் பங்கேற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்க டேஷ் 'மனிதப் பரிணாம மும் டிஜிட்டல் உலகின் சவாலும்' என்கிற தலைப் பில் சிறப்புரை நிகழ்த்தினார்.

விழாவில் தொல்காப்பி யத்தை முழுமையாக மனப்பாடம் செய்து 22 மணி 05 நிமிடங்களில் தொடர்ந்து பிழையின்றி எழுதிக் காட்டிய அரசுப் பள்ளி மாணவி மு.உமாம கேஸ்வரிக்கும் சிலப்பதிகாரத்தை முழு மையாக மனப்பாடம் செய்து ஒப்புவித்த அரசுப் பள்ளி மாணவிகள் வேணி, வீரச்செல்வி ஆகி யோருக்கும் மக்கள் சிந்த னைப் பேரவையின் சார் பில் பாராட்டு நிகழ்வு நடைபெற்றது. பாராட்டு மடல்களை சிறப்பு விருந் தினர் வழங்கினார்.

பேராசிரியர் க.பழனி துரை எழுதிய 'அரச மைப்பு சாசனம் முகப் புரை ஓர் எளிய அறிமுகம்' நூல் வெளியிடப்பட்டது. இந்நூல் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையா ளர்களுக்கு வழங்கப் பட்டது.

வி.வி.நேஷனல் மோல் டடு பர்னிச்சர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் வி.செந்தில்குமரன் நிகழ் வுக்குத் தலைமையேற் றார். ஈரோடு வேளாண் துறை இணை இயக்குநர் ஆர்.சிவக்குமார் முன் னிலை வகித்தார். எம். ஆர்.கலர் லேப் நிர்வாக இயக்குநர் எல்.நாராய ணன் வாழ்த்துரை வழங் கினார்.

இந்நிகழ்வில் முதன்மை நீதிபதி, வழக் குரைஞர்கள், பேராசிரி யர்கள், கல்லூரித் தாளா ளர்கள், முதல்வர்கள் மற்றும் பலதுறை சார்ந்த பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

## பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி

# மதுரையில் டாஸ்மாக் ஊழியர்கள் உண்ணாவிரதப் போராட்டம்

டாஸ்மாக் பணி நிரந்த ரம் காலி பாட்டில்களை திரும்ப பெரும் திட் டத்தை கைவிடவும் மற் றும் காலமுறை ஊதியம் கோரி டாஸ்மாக் ஊழியர் கள் பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடு பட்டு வருகின்றனர்.

மதுரை மாவட்டம் கோரிக்கைகளை வலியு றுத்தி தமிழகத்தி பல் வேறு மாவட்டங்களில் உண்ணாநிலை போராட் டங்கள் நடைபெற்றன. அதன் ஒரு பகுதியாக மதுரை பழங்காநத்தம் பகுதியில் தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் சங் கத்தின் சார்பாக உண்ணா நிலை போராட்டம் நடை பெற்றது. மாநில துணை தலைவர் ராமர் தலைமை வகித்தார். மாவட்ட தலை வர் ராமச்சந்திரன், ராமர் பாண்டி, ராமநாதபுரம் பொன்னுதுரை திண்டுக்கல் மகேஸ்வ ரன், தேனி பாரதராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்தபோராட் டத்தில் போதுமணி கண் ணன் கார்த்திகேயன் அருண்குமார் சங்கரலிங் கம் உட்பட டாஸ்மாக் விற்பனையாளர்கள் குடும்பத்துடன் ஒன்று சேர்ந்து பல ஆண்டுக ளாக தற்காலிகமாக பணி யாற்றும் ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய




வேண்டும் அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவி லைப்படியுடன் கூடிய காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். மற்ற கோரிக்கைகள்: காலி மது பான பாட்டில்களைப் பெறும் திட்டத்தை மாற் றுதல் மற்றும் மருத்துவக் காப்பீடு (ESI)

வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியு றுத்தி உண்ணாநிலைபோ ராட்டத்தில் ஈடுபட்டனர்.



சேலத்தில் நேற்று தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் மகளிர் அணி சார்பில் தஞ்சை மாநகரில் நேற்று முன்தினம் தமிழக எதிர் கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பெண்கள் குறித்து தவறான கருத்தை பேசியதால் தமிழக எதிர் கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் மீது நடவடிக்கை எடுத்து கைது செய்ய கோரி சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக எதிரே கோட்டை பகுதியில் உள்ள பாரத ஸ்டேட்வங்கிஎதிரேசேலம்வடக்குசட்டமன்றஉறுப்பினர்சிவக்குமார்தலைமையில்ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# தமிழக முதலமைச்சர் காணொளி வாயிலாக சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை சார்பில் புதிய கட்டடங்களை திறந்து வைத்தார்

சேலம் ஆக. 5

தமிழக முதலமைச்சர் பொதுமக்களின் முன்னேற் றத்திற்காகவும் நலனுக்காக வும்பல்வேறுதிட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அதன்படி நேற் றைய தினம் தமிழக முத லமைச்சர் சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத் துவ துறையின் சார்பில் சேலம் மாவட்டம் கொங்க ணாபுரம் அரசு ஆரம்ப சுகா தார நிலையத்தில் ரூ 1.50 கோடி மதிப்பில் கட்டப் பட்டுள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத் தையும், கன்னங்குறிச்சி



யில் ரூ.50 லட்சம் மதிப் பில் கட்டப்பட்டுள்ள வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், மேச்சேரி யில் ரூ 50 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள வட்டார பொது சுகாதார அலகு கட் டிடம் ரூ 45 லட்சம் மதிப் பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலைய கட்டிடம் என ரூ 2.95 கோடி மதிப்பில் கட்டப் பட்டுள்ள நான்கு புதிய கட் டிடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து சேலம் மாவட் டம் கொங்கணாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்து கட்டிடங் களை பார்வையிட்டார்.

# சென்னை துரைப்பாக்கம் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் 36வது ஷோரூம் திறப்பு விழா



சென்னை, ஆகஸ்ட் 05, உலகின் சில்லறை நகை விற்பனையில் வேகமாக வளர்ந்து வரும் முன்னணி நிறுவனமான மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நிறுவனம் பிரம்மா ண்ட மான ஷோரூமை சென்னை துரைப்பாக்கம் ஒ.எம்.ஆர் சாலையில் திறந்துள்ளது. இந்த ஷோரூமில் அதிகமான இடவசதி, புதிய மாடல் கள் மற்றும் டிசைன்களில் தங்கம், வைரம், மற்றும் வெள்ளி, நகைகளின் கலெக்சன்கள் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இந்த புதிய ஷோரூமை தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அரசு தலைமை கொறடாரா.சபரிநாதன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மல பார் கோல்டு & டைமண்ட்ஸ் தமிழ்நாடு தலைவர் யாசர், தமிழ்நாடு மண்டல வணிக தலைவர் சபீர் அலி, தமிழ்நாடு வடக்கு மண் டல தலைவர் அமீர் பாபு, தமிழ்நாடு மேற்கு மண் டல தலைவர் நௌசாத், துரைபாக்கம் ஒ.எம்.ஆர் ஷோரூமின் கிளை துணைத் தலைவர் ரிஜாஸ் சாஹிம் உள்ளிட்ட மேலாண்மை உறுப்பினர் கள்பணியாளர்கள்கலந்து கொண்டனர். இந்த ஷோரூமில் திறப்பு விழாச் சலுகைகளாக தங் கம், அன்கட், மற்றும் நவ ரத்தின நகைகளின் சேதா ரத்தில் 30% வரைதள்ளபடி பெறலாம். மேலும் வெள்ளி கொலுசுகள் மற் றும் பொருட்களுக்கு சேதாரத்தில் பிளாட் 25% தள்ளுபடியும், மற்றும் வெள்ளி பொருட்களின் விலையிலிருந்து பிளாட் 10% தள்ளுபடியும் பெற லாம்.




உதயநிதி ஸ்டாலின் பேச்சை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் த.வெ.க. சார்பில் ஆர்ப்பாட்டம்; தூத்துக்குடியில் முன்னாள் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் நேற்று தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அரைமணி நேர ஆர்ப்பாட்டம்

அதன் ஒரு பகுதியாக, தூத்துக்குடி மாநகரில் 12வது வாசல் மையவாடி அருகிலுள்ள மைதானத்தில் காலை 11 மணியளவில் தொடங்கி சுமார் அரைமணி நேரம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் த.வெ.க. நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டு, உதயநிதி ஸ்டாலின் பேச்சுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.அரசியல் நாகரிகத்தை பின்பற்ற வேண்டும் என்றும், எதிர்க்கட்சியினரையும் மக்களின் கருத்துகளையும் மதிக்கும் வகையில் பொது வாழ்க்கையில் செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர் இந்த ஆர்ப்பாட்டத்தில் தவெக கட்சியினர் வழக்கத்தை விட குறைந்த எண்ணிக்கையில் நூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

# எட்டயபுரம் அருகே 15 ஆண்டுகளாக குடிநீர் இல்லாமல் தவிக்கும் கிராம மக்கள்

எட்டயபுரம், ஆக. 5: தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன் றத் தொகுதிக்குட்பட்ட எட்டயபுரம் அருகே உள்ள குமாரட்டியாபுரம் கிராமத் தில் 300க்கும் மேற்பட் டோர் வசித்து வருகின்ற னர். இக்கிராமத்தில் கடந்த 15 ஆண்டுகளாக நிலவி வரும்குடிநீர்பிரச்சினைக்கு இதுவரை நிரந்தர தீர்வு கிடைக்காததால், கிராம மக்கள் மீண்டும் அரசிடம் நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத்துள்ளனர்.



குடிநீர் வசதி ஏற்படுத் தக்கோரி சட்டமன்ற உறுப் பினர், அமைச்சர், நாடாளு மன்றஉறுப்பினர்,மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழக முதல்வர் உள்ளிட்ட பலரி டம் பலமுறை மனுக்கள் அளித்தும், சாலை மறியல், தேர்தல் புறக்கணிப்பு, சுதந் திரதின விழா புறக்கணிப்பு போன்றபல்வேறுபோராட் டங்களை முன்னெடுத்தும் பயனில்லை என மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

போராட்ட அறிவிப்புக ளுக்கு பிறகு அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி தற் காலிகமாக இரண்டு அல் லது மூன்று நாட்கள் மட் டுமே குடிநீர் வழங்கப்படுவதாகவும், அதன் பின்னர் மீண்டும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்ப டுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், கிராமத்தில் உள்ள கண்மாய் மற்றும் கிணறுகளை பல ஆண்டுக ளாக தூர்வாராததால் நிலத் தடி நீர் உப்புத்தன்மை மற் றும் துவர்ப்புச் சுவையுடன் இருப்பதால் குடிப்பதற்கு தகுதியற்ற நிலையில் உள் ளதாக கூறப்படுகிறது. விவசாயத்தை நம்பி வாழும் பெரும்பாலான குடும்பங்கள் பொருளா தார நெருக்கடியில் இருப்ப தால், விலைக்கு குடிநீர் வாங்கும் வசதியும் இல் லையெனமக்கள்வேதனை தெரிவித்துள்ளனர்.

சீவலப்பேரி–வல்லநா டு–அருப்புக்கோட்டை கூட்டுக் குடிநீர் திட்டம் மற் றும் கோவில்பட்டி–நாலக் கம்பட்டி கூட்டுக் குடிநீர் குழாயிலிருந்து தங்கள் கிராமத்திற்கும் குடிநீர் வழங்க வேண்டும் என பல முறை கோரிக்கை வைத் தும் நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்றும் குற்றச்சாட்டு எழுந்துள் ளது. அதிகாரிகளிடம் அளிக்கப்படும் மனுக்கள் முறையாக விசாரிக்கப்படாமல் இருப் பதாகவும் அவர்கள் தெரி வித்தனர்.

தற்போது கிராம மக்கள், குறிப்பாக பெண்கள், சுமார் 400 மீட்டர் தூரத்தில் உள்ள கூட்டுக் குடிநீர் குழா யில் வீணாக வெளியேறும் (ஓவர்ஃப்ளோ) தண்ணீரை கப்புகளில் எடுத்து குடங்க ளில் சேகரித்து குடிநீராக பயன்படுத்தும் அவலநி லையில் உள்ளனர்.

எனவே, குமாரட்டியாபுரம் கிராமத் தின் 15 ஆண்டுகால குடிநீர் பிரச்சினைக்கு தமிழக அரசு உடனடி மற்றும் நிரந் தர தீர்வு காண வேண்டும் என்று கிராம மக்கள் வலியு றுத்தியுள்ளனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, காணொலிக் காட்சி வாயிலாக, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர், ஊத்தங்கரை மற்றும் கெலமங்கலம் அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரியில், பொதுப்பணித்துறை சார்பாக, ரூ.22 கோடியே 75 இலட்சத்து 26 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 3 முன் கட்டமைப்பு பணிமனை கட்டிடங்கள் மற்றும் 5 புதிய ஆய்வகங்களை திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து, பர்கூர் அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில், டாடா டெக்னாலஜிஸ் நிறுவனம், சமூக பொறுப்பு நிதியின் கீழ், ரூ.6 கோடியே 25 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள முன் கட்டமைப்பு பணிமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார்.சட்டமன்ற உறுப்பினர்கள் .இ.சி.கோவிந்தராசன் (பர்கூர்), .பா.முகுந்தன் (கிருஷ்ணகிரி) ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கு ஏற்றி வைத்து, பணிமனையை பார்வையிட்டார். உடன், பர்கூர் அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரி முதல்வர்.பி.கே.முருகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## தருமபுரி மாவட்ட தவெக மகளிர் அணி சார்பில் சார்பில்

# பெண்களை இழிவாக பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உருவப்படத்தை தீ வைத்து எரித்து போராட்டம்



தருமபுரி ஆகஸ்ட் 05

தருமபுரி மாவட்ட தவெக மகளிர் அணி சார்பில் தஞ்சாவூரில் நடைபெற்ற போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், பெண்களை இழிவு படுத்தி பேசியதாக கூறி, தமிழ்நாடு முழுவதும் தவெகவினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இதனைதொடர்ந்து தருமபுரி தொலைபேசி நிலையம் அருகே நடைபெற்ற தவெக கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சிவன் தலைமை தாங்கினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி பெண்களை இழிவுபடுத்தி பேசியதாக கூறி, கண்டன முழக்கங்களை எழுப்பியும், உதயநிதி ஸ்டாலின் உருவப்படத்தை காலணியால் அடித்தும், பெட்ரோல் ஊற்றி, தீ வைத்து எரித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் விஜயகாந்த், மேற்கு மாவட்ட மகளிர் அணி தலைவி சத்யா வீரமணி, கிழக்கு மாவட்ட மகளிர் அணி தலைவி திலகவதி ,மாவட்ட இணை செயலாளர் வீரமணி மாவட்ட இளைஞரணி விமல்ராஜ் மற்றும் மாவட்ட, நகர ஒன்றிய, கிளைகழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் நகர செயலாளர் சிட்டி சுரேஷ் நன்றி கூறினார்.

# ரூ.61.48 லட்சம் மதிப்பிலான வளர்ச்சி திட்டப் பணிகளை ஆய்வு செய்த திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர்



திருப்பத்தூர், ஆக. 5: திருப்பத்தூர் மாவட்டம், சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மல்லபள்ளி, அக்ரஹாரம் மற்றும் புத்தாகரம் ஊராட்சிகளில் ரூ.61.48 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் கு. ரவிகுமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மல்லபள்ளி ஊராட்சியில், ஊராட்சி சாலை பராமரிப்பு திட்டத்தின் கீழ் ரூ.8.47 லட்சம் மதிப்பீட்டில் அன்னசாகரம் முதல் நாயுடு வட்டம் வரை 460 மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்டு வரும் சாலைப் பணிகளை ஆய்வு செய்த ஆட்சியர், பக்கவாட்டு மண் உறுதிப்படுத்தும் பணிகள் உள்ளிட்ட நிலுவைப் பணிகளை ஒரு வாரத்திற்குள் முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அக்ரஹாரம் ஊராட்சியில், வளர்ச்சியடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சமுதாய நீர் சேகரிப்பு குளப் பணிகளை பார்வையிட்ட அவர், பணிகளை தரமாகவும் விரைவாகவும் நிறைவேற்ற அறிவுறுத்தினார். புத்தாகரம் ஊராட்சியில், 15வது மத்திய நிதிக் குழு மானியத் திட்டத்தின் கீழ் ரூ.5.85 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாய சுகாதார வளாகத்தை ஆய்வு செய்த ஆட்சியர், வெள்ளையடிக்கும் பணி, கதவுஜன்னல் பொருத்துதல், மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வு தளம் மற்றும் கைப்பிடி உள்ளிட்ட மீதமுள்ள பணிகளை 15 நாட்களுக்குள் முடிக்க உத்தரவிட்டார்.

மேலும், நபார்டு (RIDF 202627) திட்டத்தின் கீழ் ரூ.47.16 லட்சம் மதிப்பீட்டில் மங்னூர்–கோணபட்டு சாலை அமைக்கும் பணியையும் ஆய்வு செய்து, நிலுவையில் உள்ள பணிகளை ஒரு வாரத்திற்குள் நிறைவு செய்ய அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள. தமிழரசி உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கிள்ளியூர் தெற்கு ஒன்றியம் சார்பில் உதயநிதி கைது கண்டித்து ஆர்ப்பாட்டம்



கருங்கல், ஆக.5 குமரி மேற்கு மாவட்டம் கிள்ளியூர்தெற்கு ஒன்றிய தி மு க சர்பில் மாநில இளைஞரணி செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் கைததை கண்டித்து கிள்ளியூர் தாலுகா அலுவலகம்முன்புசாலை மறியல் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் கோபால் தலைமை வகித்தார். வழக்கறிஞர் ஜெபஜான், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஜோசப்ராஜ், பேரூர் செயலாளர்கள் ராபின்சன், அருள்ராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அனுலால்டாம் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பைஜு, ஒன்றிய பொருளாளர் தங்கதுரை, சுற்றுச்சூழல்அணிதுணை அமைப்பாளர் ஜெனே, பெஜான்சிங், ஜெனோபட் மற்றும் சேகர், கருங்கல் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் அனீஸ், மகளிர் அணி மாவட்ட தலைவர் எஃப்சி ராணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவில் அருகே கோவில் நிலத்தில் உள்ள வீடுகளை இடிக்க எதிர்ப்பு



நாகர்கோவில், ஆக. 5

நாகர்கோவில் அடுத்த ஈத்தாமொழி பூச்சிவிளாகம் சந்திப்பு பகுதியில் திருச்செந்தூர் சுப்பி ரமணியசுவாமி கோவிலுக்கு சொந்தமான சுமார் ஒன்றரை ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிறத்தில் 50 ஆண்டுகளுக்கு மேலாக 50 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வீடு கட்டி வசித்து வருகின்றனர். இங்கு வசிக்கும் மக்களின் வீடுகளுக்கு தர்மபுரம் ஊராட்சி மூலமாக முறையே வீட்டு வரி, தண்ணீர் வரி மற்றும் மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.இந்த நிலையில் இந்து சமய அறநிலைத்துறை அதிகாரிகள் மற்றும் கோயில் தரப்பினர் அப்பகுதியில் வசிக்கும் மக்களை அப்புறப்படுத்தும் நோக்கில் அங்கு வந்து அவர்கள் வீடுகளை இடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த மக்கள் அதிகாரிகளை கண்டித்து நாகர்கோவில் ஈத்தாமொழி சாலையில் திடீர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து கருமையாக பாதிக்கப்பட்டது. பொதுமக்களுக்கு ஆதரவாக மார்க்சிஸ்ட் கட்சி, திமுக, அதிமுக கட்சியினர் ஏராளமானோர் போராட்டத்தில் பங்கேற்றனர். பின்னர் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். ஆனால் போராட்டத்தை கைவிட மறுத்து பொதுமக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தினர்.

பல ஆண்டுகளாக தங்கள் இந்த பகுதியில் குடியிருந்து வரும் நிலையில் எந்த முன்னறிவிப்பும் இன்றி அதிகாரிகள் இதுபோன்ற செயலில் ஈடுபட்டது கண்டிக்கத்தக்கது என தெரிவித்தனர். ஆனால் அதிகாரிகள் தரப்பில் நீதிமன்ற உத்தரவை காட்டி அதன் பேரில் நடவடிக்கை எடுப்பதாக கூறினர்.

பொதுமக்கள் வீடுகளை இடிக்க அவகாசம் கேட்டனர். ஆனால் கோர்ட்டு உத்தரவு என்பதால் நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும் என அதிகாரிகள் கூறினார்.

பின்னர் நீதிமன்றத்திற்கு பொதுமக்கள் தரப்பில் அவகாசம் கேட்டு கடிதம் தருமாறும், நீதிமன்றத்தின் தாக்கல் செய்து அதன்படி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் கூறினார்கள்.



தேனி வட்டம் கோட்டூர் அரசினர் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் ஆண்டிபட்டி வட்டம், தேக்கம்பட்டி அரசு பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் தலா ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 தரத்தில் சிறப்பு திறன்மிகு மையக் கட்டடங்களைக் காணொளிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, உத்தமபாளையம் வட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., மற்றும் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ.ஜெகநாத்மிஸ்ரா கலந்து கொண்டு, அடுக்குமாடிக் குடியிருப்புகளை நேரில் பார்வையிட்டு, குத்துவிளக்கேற்றி வைத்து பயனாளிகளுக்கு குடியிருப்புஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார்கள்.

# பாரதியார் பல்கலைக்கழகத்தில் கண்டன ஆர்பாட்டம்!




கோவை ஆக:05 திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆய்வகத்தில்,கடந்த ஜூலை 24ம் தேதி, பாலியல் சீண்டலுக்கு ஆளான மாணவிக்கு உரிய நியாயம் கிடைக்க வேண்டும்,திருவள்ளுவர் பல்கலைக்கழக உள்ளக விசாரணை குழுவிற்க்கு தற்போது உள்ள தலைமையை மாற்றம் செய்ய வேண்டும் எனவும் 2012ம் ஆண்டு முதல் திருவள்ளுவர் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் அளிக்கப்பட்ட பாலியல் புகார்களை இன்று வரை மோசடியாக முடித்து வைத்து வரும் தற்போதைய தேர்வு கட்டுப்பாட்டு பொறுப்பு அலுவலர்,பாபு ஜனார்த்தனன் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் திருமணமான சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பெண் கொடுத்த புகாரின் மீதான விசாரணையில் பாதிக்கப்பட்ட பெண்ணை விசாரணைக்கு வரவிடாமல் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்ட புகாரின்மேல்விசாரணையை முழுமையாக செய்யக் கோரியும் சென்னை உயர்நீதிமன்றம் 2017 ஆம் ஆண்டு அளித்த தீர்ப்பின்படி,2013 ஆம் வருடத்திய பாலியல் சீண்டல் குறித்து 10 ஆண்டுகளுக்கும் மேலாக இன்று வரை நடவடிக்கை எடுக்காத திருவள்ளுவர் பல்கலைக்கழக நிர்வாகத்தை கண்டித்து, கோவை மருதமலை பகுதியில் உள்ள பாரதியார் பல்கலைக்கழக தொழிலாளர் சங்கம் நடத்தும் மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய பாரதியார் பல்கலைக்கழக தொழிலாளர் சங்க செயலாளர் ரமேஷ் கூறியதாவது, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பல்வேறு பாலியல் சீண்டல்களில் ஈடுபட்டு வருபவர்கள் மீது உரிய விசாரணை நடத்தாமல் பாலியல் சீன்டலுக்கு ஆளாகும் நபர்களை தப்பிக்க வைக்கும் வகையில் தேர்வு கட்டுப்பாட்டு பொறுப்பு அலுவலர் செயல்பட்டு வருகின்றார் இவர் மீதும் இப் பல்கலைக்கழகத்தில் பாலியல் சீண்டலில் ஈடுபடும் நபர்கள் மீதும் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு கொண்டார்.சங்க தலைவர் சாந்தாமணி சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கோவை சூலூர் பேரூராட்சி அருகில் என்.எம்.சுகுமார் எம். எல்.ஏ. தலைமையில் உதயநிதி ஸ்டாலின் ஆபாச பேச்சை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இதில் பெண்கள் உட்பட 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட மகளிர் அணியினர் அவருக்கு எதிராக கோஷங்களை எழுப்பி கண்டன குரல்களை பதிவு செய்தனர்.

# தாதி பிரகாஷ்மணிஜியின் புனித நினைவாக போதை விழிப்புணர்வு முகாம்!



போதை இல்லாத பாரதத்தை உருவாக்கும் உன்னத நோக்கோடு, இந்திய அளவில் ஆகஸ்ட் 6 முதல் 20 தேதி வரை 10 கோடி மக்களை சந்தித்து போதை விழிப்புணர்வு வழங்கும் நாடளாவிய பிரச்சாரம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழாவாக, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள வெங்கடேஸ்வரா கல்லூரியில் மாணவர்களுக்கான போதை விழிப்புணர்வு முகாம் சிறப்பாக நடைபெற்றது.

உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, மாணவர்களிடையே போதை விழிப்புணர்வு குறித்த சிறப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது. அந்த உறுதிமொழியின் முக்கிய அம்சங்கள்: ★ போதை விலகல்: அனைத்து விதமான போதைப் பழக்கங்கள் மற்றும் அடிமைத் தளங்களில் இருந்து முழுமையாக விடுபடுதல். ★ ஆரோக்கியமான வாழ்க்கை: ஆரோக்கியமான நற்பண்புகள் சார்ந்த மற்றும் நேர்மையான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தல். ★ சமுதாய விழிப்புணர்வு: எனது குடும்பம், நண்பர்கள் மற்றும் சமுதாயத்தை போதையில்லா வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்ள ஊக்கப்படுத்துதல். ★ தேச வளர்ச்சி: எனது நேரம், ஆற்றல், திறமைகள் மற்றும் வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தி, போதை இல்லாத ஆரோக்கியமான மற்றும் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு நேர்மையான பங்களிப்பை வழங்குதல். இவ் விழாவில் திருவள்ளூர் மாவட்ட பிரம்மகுமாரிகள் பொறுப்பாளர் சகோதரி ஜெயலட்சுமி, வெங்கடேஸ்வரா கல்லூரி தலைவர் புருஷோத்தமன், செயலாளர் நந்தகுமார் மற்றும் ஏராளமான கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# எலவம்பட்டி ஊராட்சி அண்ணா நகர் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் சேதமடைந்த மின் கம்பம், தொங்கும் மின் கம்பிகள்!

## அலட்சியம் காட்டும் கொரட்டி மின் பகிர்மான அலுவலர்கள்!



திருப்பத்தூர்: ஆக:5, திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி ஊராட்சி அண்ணா நகர் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் ஆபத்தான நிலையில் மின் கம்பம் உடைந்தும், கம்பிகள் தொங்கியபடி உள்ளது. இந்நிலையில் அப்பகுதி மக்கள் பல முறை தெரிவித்தும் சம்பந்தப்பட்ட கொரட்டி மின் பகிர்மான அலுவலர்கள் ஆறு மாத காலமாக மெத்தன போக்காக செயல்படுவதாக கூறப்படுகிறது.

குறிப்பாக ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் மக்கள் வசித்து வரும் இப்பகுதியினை உதாசீனம் செய்து வருவதாகவும், மாதம் ஒரு முறையாவது அப்பகுதியில் மின்சாரத்துறையினர் பார்வையிடுவதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து வருகிறது.

எலவம்பட்டி ஊராட்சியில் பல்வேறு இடங்களில் மின் கம்பங்கள் உடைந்த நிலையிலும், மின் கம்பிகள் தொங்கிய நிலையில் உள்ளது. சம்மந்தப்பட்ட கொரட்டி மின் பகிர்மானம் துறை உடனடி நடவடிக்கை மேற்கொள்வார்களா? என் அப்பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நவீன சந்தைகளில் சட்டவிரோத வர்த்தகத்தை எதிர்கொள்வது" பற்றிய கருத்தரங்கம்




சென்னை, ஆகஸ்ட் 05,

இந்திய சில்லறை விற்பனையாளர்கள் சங்கத்தின் கூட்டமைப்பு (FRAI) சார்பில் தமிழ்நாடு மாநில பிரிவு சென்னையில் "நவீன சந்தைகளில் சட்டவிரோத வர்த்தகத்தை எதிர்கொள்வது" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

சில்லறை விற்பனையாளர்கள், வர்த்தக சங்கங்கள் ஒன்றிணைந்து இந்தியாவின் சில்லறை சுற்றுச்சூழல் அமைப்பை பாதிக்கும் அச்சுறுத்தல்கள் குறித்து விவாதித்தனர்.

சட்டவிரோத வர்த்தகம் மற்றும் நியாயமற்ற சந்தை நடைமுறைகள் இரண்டும் உண்மையான வணிகங்கள், அரசாங்க வருவாய், நுகர்வோர் நம்பிக்கை மற்றும் மாநிலம் முழுவதும் உள்ள லட்சக்கணக்கான சிறு வணிகர்களின் வாழ்வாதாரங்களை மோசமாக பாதிக்கின்றன என்று கருத்தரங்கு எடுத்துரைத்தது.

இந்நிகழ்ச்சியில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம். எல் .விஜயபிரபு, உதவி காவல் ஆணையர் ஐ. இராஜபால், தமிழ்நாடு வணிகர்சங்கத்தின் செயலாளர் மேஸ்மூர்காந்தன் வெள்ளையன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஆர்.தில்லிபாபு, தவெக ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.மதன்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய கூட்டமைப்பு தமிழ்நாடு பிரிவின் தலைவர் சி. செல்லதுரை, "சட்டவிரோத வர்த்தகம் இனி வெறுமனே ஒரு வணிகப் பிரச்சினை அல்ல. ணஇது நுகர்வோர் பாதுகாப்பு, நியாயமான போட்டி மற்றும் இலட்சக்கணக்கான நேர்மையான சில்லறை விற்பனையாளர்களின் வாழ்வாதாரங்களுக்கு கடுமையான அச்சுறுத்தலாக மாறியுள்ளது. கள்ளச்சந்தை மற்றும் சட்டவிரோதமாக பெறப்பட்ட தயாரிப்புகள் தரமற்ற மற்றும் பாதுகாப்பற்ற பொருட்களால் நுகர்வோர் பாதிக்கபடுகின்றனர். இதனால் முறையான வணிகங்களின் நம்பகத்தன்மையையும் கெட்டுப்போகிறது. ஃபிளாஷ் விற்பனை, நம்பத்தகாத தள்ளுபடி, தீவிரமான விலை உத்திகள் மற்றும் அதிவேக விநியோகத்திற்கான தொடர்ச்சியான உந்துதல் ஆகியவை, நுகர்வோர் பெரும்பாலும் உண்மையான மற்றும் போலி தயாரிப்புகளைவேறுபடுத்திப்பார்க்கமுடியாதசூழலைஉருவாக்கியுள்ளன என்று தெரிவித்தார்.

வருவாய் கோட்டாசியர் அவர்கள்
திருப்பூர் மாவட்டம்.
நாள்:17.07.2026
ஒ.மு.2026/2026/ஆ2

திருமதி. பிரியா
க/பெ/பிரபு
க.எண்:1/10 மருதாச்சலபுரம்,
1,வது விதி, திருப்பூர் வடக்கு.
திருப்பூர் மாவட்டம்.
பார்வை: மனுதாரர் திருமதி. பிரியா ,க/பெ/பிரபு என்பவர் மனு நாள்:02.04.2026.
... மனுதாரர்.
இல்லை
... எதிர் மனுதாரர்.

பொது அறிவிப்பு

மேற்கண்ட முகவரியில் வசிக்கும் திருமதி. பிரியா என்பவரது தனது கணவர் திரு. பிரபு என்பவர். கடந்த 03.04.2020 அன்று திருப்பூர் மாவட்டம்.H.V.டவர் ஹோட்டல் அறை எண்:206 என்ற மேற்படி முகவரியில் இறந்தது தொடர்பாக, இறப்பினை அந்நேரத்தில் பதிவு செய்ய தவறிய நிலையில் கால தாமதக் கட்டணத்துடன் இறப்பு சான்று பதிவு செய்து தர வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில்மனுசெய்துள்ளார். இம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் இந்த அறிவிப்பு பிரதி வெளியான 15. நாட்களுக்குள் கனம் வருவாய் கோட்டாட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது அவசியம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்,
திருமதி.பிரியா.க/பெ/பிரபு
க.எண்:1/10 மருதாச்சலபுரம்,
1,வது விதி, திருப்பூர் வடக்கு.
திருப்பூர் மாவட்டம்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C,246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.